

திராவிடர் எழுச்சி நாள்
முத்தமிழறிஞர் கலைஞரின் 103 – ஆம் பிறந்த நாள்
# தாய்க்கழகமாம் திராவிடர் கழகத்தின் சார்பில் நான்கு மாநிலங்களில் 103 பரப்புரைக் கூட்டங்கள்
(2026 ஜூன் 5, 6, 7, 8, 9, 10)





| வரிசை எண் | நாள் | கழக மாவட்டம் | கூட்டம் நடைபெறும் இடம் | சொற்பொழிவாளர்கள் |
|---|---|---|---|---|
| 1. | 06.06.2026 | தேனி | பெரியகுளம் | தமிழர் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி, முனைவர் வா.நேரு, இரா.குணசேகரன் |
| 2. | 07.06.2026 | மதுரை புறநகர் | மேலூர் | தமிழர் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி, முனைவர் வா.நேரு, இரா.குணசேகரன் |
| 3. | 05.06.2026 | தாம்பரம் | தாம்பரம் | முனைவர் வீ.அன்புராஜ், முனைவர் அதிரடி க.அன்பழகன், இர.சிவசாமி |
| 4. | 05.06.2026 | அரூர் | அரூர் | முனைவர் துரை.சந்திரசேகரன், ஊமை.ஜெயராமன் |
| 5. | 06.06.2026 | ஒசூர் | ஒசூர் | முனைவர் துரை.சந்திரசேகரன், ஊமை.ஜெயராமன் |
| 6. | 07.06.2026 | கருநாடகா | பெங்களூரு | முனைவர் துரை.சந்திரசேகரன் |
| 7. | 08.06.2026 | கிருஷ்ணகிரி | காவேரிபட்டினம் | முனைவர் துரை.சந்திரசேகரன் அண்ணா.சரவணன் |
| 8. | 09.06.2026 | திருப்பத்தூர் | திருப்பத்தூர் | முனைவர் துரை.சந்திரசேகரன், அண்ணா.சரவணன் |
| 9. | 05.06.2026 | கும்மிடிப்பூண்டி | புழல் | வழக்குரைஞர் அ.அருள்மொழி, வி.பன்னீர்செல்வம் |
| 10. | 06.06.2026 | ஆவடி | அம்பத்தூர் | வழக்குரைஞர் அ.அருள்மொழி, வி.பன்னீர்செல்வம் |
| 11. | 07.06.2026 | செங்கல்பட்டு | சிங்கப்பெருமாள் கோவில் | வழக்குரைஞர் சு.குமாரதேவன், வி.பன்னீர்செல்வம் |
| 12. | 08.06.2026 | சோழிங்கநல்லூர் | சோழிங்கநல்லூர் | வழக்குரைஞர் சு.குமாரதேவன், இர.சிவசாமி |
| 13. | 09.06.2026 | திருவொற்றியூர் | திருவொற்றியூர் | வழக்குரைஞர் அ.அருள்மொழி வழக்குரைஞர் ஆ.வீரமர்த்தினி |
| 14. | 06.06.2026 | பட்டுக்கோட்டை | மதுக்கூர் | முனைவர் அதிரடி க.அன்பழகன் முனைவர் வே.இராஜவேல் |
| 15. | 07.06.2026 | அறந்தாங்கி | கீரமங்கலம் | முனைவர் அதிரடி க.அன்பழகன் சில்லத்தூர் சிற்றரசு |
| 16. | 08.06.2026 | கும்பகோணம் | கும்பகோணம் | முனைவர் அதிரடி க.அன்பழகன் இரா.ஜெயக்குமார், சு.விஜயக்குமார் |
| 17. | 09.06.2026 | வடசென்னை | புளியந்தோப்பு | முனைவர் அதிரடி க.அன்பழகன் சோ.சுரேஷ் |
| 18. | 08.06.2026 | மேற்கு சென்னை | எம்.ஜி.ஆர். நகர் | ச.பிரின்சு என்னாரெசு பெரியார், சோ.சுரேஷ் |
| 19. | 09.06.2026 | காஞ்சிபுரம் | வாலாஜா | ச.பிரின்சு என்னாரெசு பெரியார், வழக்குரைஞர் சு.குமாரதேவன் |
| 20. | 05.06.2026 | புதுச்சேரி | புதுச்சேரி | வழக்குரைஞர் சே.மெ.மதிவதனி, சிவ.வீரமணி |
| 21. | 06.06.2026 | தென்சென்னை | மயிலாப்பூர் | வழக்குரைஞர் சே.மெ.மதிவதனி, இரா.அன்புமதி, மு.சண்முகப்பிரியன் |
| 22. | 07.06.2026 | கோபிசெட்டி பாளையம் | கொளப்பலூர் | வழக்குரைஞர் சே.மெ.மதிவதனி, ஈட்டி கணேசன் |
| 23. | 08.06.2026 | கோயமுத்தூர் | கோயமுத்தூர் | வழக்குரைஞர் சே.மெ.மதிவதனி |
| 24. | 09.06.2026 | திண்டிவனம் | திண்டிவனம் | வழக்குரைஞர் சே.மெ.மதிவதனி |
| 25. | 05.06.2026 | ஆத்தூர் | பெத்தநாயக்கன் பாளையம் | இரா.பெரியார் செல்வன் |
| 26. | 07.06.2026 | சேலம் | ஆட்டையாம்பட்டி | இரா.பெரியார் செல்வன் |
| 27. | 06.06.2026 | மேட்டூர் | மேட்டூர் | இரா.பெரியார் செல்வன் |
| 28. | 08.06.2026 | திருச்செங்கோடு | திருச்செங்கோடு | இரா.பெரியார் செல்வன், ஊமை.ஜெயராமன் |
| 29. | 09.06.2026 | நாமக்கல் | நாமக்கல் | இரா.பெரியார் செல்வன், ஊமை.ஜெயராமன், ஈட்டி கணேசன் |
| 30. | 05.06.2026 | வடசென்னை | அயனாவரம் | வழக்குரைஞர் சு.குமாரதேவன், வழக்குரைஞர் பா.மணியம்மை |
| 31. | 06.06.2026 | தென்சென்னை | சைதாப்பேட்டை | வழக்குரைஞர் பா.மணியம்மை, சோ.சுரேஷ் |
| 32. | 07.06.2026 | திருவள்ளூர் | திருத்தணி | வழக்குரைஞர் பா.மணியம்மை, பொதட்டூர் புவியரசன் |
| 33. | 08.06.2026 | ஆவடி | ஆவடி | வழக்குரைஞர் பா.மணியம்மை, க.ஏ.தமிழ்முரசு |
| 34. | 09.06.2026 | ராணிப்பேட்டை | அரக்கோணம் | வழக்குரைஞர் பா.மணியம்மை, இரா.அன்புமதி |
| 35. | 05.06.2026 | கடலூர் | கடலூர் | இராம.அன்பழகன், புதுவை குமார் |
| 36. | 06.06.2026 | விருத்தாசலம் | விருத்தாசலம் | இராம.அன்பழகன், த.சீ.இளந்திரையன் |
| 37. | 07.06.2026 | அரியலூர் | வி.கைகாட்டி | இராம.அன்பழகன், க.சிந்தனைச்செல்வன் |
| 38. | 08.06.2026 | விழுப்புரம் | கண்டாச்சிபுரம் | இராம.அன்பழகன் |
| 39. | 09.06.2026 | ஆத்தூர் | ஆத்தூர் | இராம.அன்பழகன் |
| 40. | 05.06.2026 | மன்னார்குடி | விளக்குடி | வழக்குரைஞர் பூவை.புலிகேசி, சு. சிங்காரவேலர் |
| 41. | 06.06.2026 | திருவாரூர் | திருவாரூர் | வழக்குரைஞர் பூவை.புலிகேசி |
| 42. | 07.06.2026 | நாகப்பட்டினம் | நாகப்பட்டினம் | வழக்குரைஞர் பூவை.புலிகேசி |
| 43. | 08.06.2026 | மயிலாடுதுறை | குத்தாலம் | வழக்குரைஞர் பூவை.புலிகேசி கடவாசல் குணசேகரன் |
| 44. | 09.06.2026 | சிதம்பரம் | சிதம்பரம் | வழக்குரைஞர் பூவை.புலிகேசி, பேரா.பூ.சி.இளங்கோவன் |
| 45. | 05.06.2026 | மதுரை | மதுரை | தி.என்னாரெசு பிராட்லா, சுப.பெரியார்பித்தன் |
| 46. | 08.06.2026 | செய்யாறு | வடமணப்பாக்கம் | தி.என்னாரெசு பிராட்லா |
| 47. | 09.06.2026 | வேலூர் | சத்துவாச்சேரி | தி.என்னாரெசு பிராட்லா |
| 48. | 05.06.2026 | இராமநாதபுரம் | இராமநாதபுரம் | முனைவர் வா.நேரு |
| 49. | 08.06.2026 | காரைக்குடி | கல்லல் | முனைவர் வா.நேரு |
| 50. | 09.06.2026 | சிவகங்கை | சிங்கம்புணரி | முனைவர் வா.நேரு |
| 51. | 05.06.2026 | திருச்சி | திருச்சி | கோவை க.வீரமணி, வி.சி.வில்வம் |
| 52. | 06.06.2026 | துறையூர் | துறையூர் | கோவை க.வீரமணி |
| 53. | 07.06.2026 | லால்குடி | லால்குடி | கோவை க.வீரமணி |
| 54. | 08.06.2026 | பெரம்பலூர் | வேப்பந்தட்டை | கோவை க.வீரமணி |
| 55. | 09.06.2026 | கரூர் | வேலாயுதம் பாளையம் | கோவை க.வீரமணி, ஈட்டி கணேசன் |
| 56. | 05.06.2026 | தஞ்சாவூர் | தஞ்சாவூர் | தே.நர்மதா, இரா.ஜெயக்குமார் |
| 57. | 06.06.2026 | அரியலூர் | திருமழப்பாடி | தே.நர்மதா, க.சிந்தனைச்செல்வன், பேரா.இ.வளனறிவு |
| 58. | 07.06.2026 | பட்டுக்கோட்டை | பேராவூரணி | தே.நர்மதா, சில்லத்தூர் சிற்றரசு, சோம.நீலகண்டன் |
| 59. | 08.06.2026 | மன்னார்குடி | வடுவூர் | தே.நர்மதா, சு.சிங்காரவேலர் |
| 60. | 09.06.2026 | கும்பகோணம் | பாபநாசம் | தே.நர்மதா, இரா.ஜெயக்குமார் |
| 61. | 05.06.2026 | திருப்பத்தூர் | வாணியம்பாடி | முனைவர் காஞ்சி பா.கதிரவன் |
| 62. | 06.06.2026 | கிருஷ்ணகிரி | ஊத்தங்கரை | முனைவர் காஞ்சி பா.கதிரவன், தகடூர் தமிழ்ச்செல்வி |
| 63. | 07.06.2026 | திருவண்ணாமலை | வேட்டவலம் | முனைவர் காஞ்சி பா.கதிரவன் வேட்டவலம் பட்டாபிராமன் |
| 64. | 08.06.2026 | கள்ளக்குறிச்சி | மணலூர்பேட்டை | முனைவர் காஞ்சி பா.கதிரவன் |
| 65. | 09.06.2026 | அரூர் | பாப்பிரெட்டிபட்டி | முனைவர் காஞ்சி பா.கதிரவன், மாரி.கருணாநிதி |
| 66. | 05.06.2026 | கன்னியாகுமரி | நாகர்கோயில் | பொன்.அருண்குமார் |
| 67. | 06.06.2026 | திருநெல்வேலி | வள்ளியூர் | பொன்.அருண்குமார் |
| 68. | 07.06.2026 | தென்காசி | செங்கோட்டை | பொன்.அருண்குமார், பூ.சிவக்குமார் |
| 69. | 08.06.2026 | தூத்துக்குடி | சிவகளை | மா.பால்ராசேந்திரம், பொன்.அருண்குமார் |
| 70. | 09.06.2026 | விருதுநகர் | அருப்புக்கோட்டை | பொன்.அருண்குமார், பூ.சிவக்குமார் |
| 71. | 05.06.2026 | மேட்டுப்பாளையம் | மேட்டுப்பாளையம் | சு.பெ.தமிழமுதன் |
| 72. | 06.06.2026 | நீலமலை | குன்னூர் | சு.பெ.தமிழமுதன் |
| 73. | 07.06.2026 | திருப்பூர் | காங்கேயம் | சு.பெ.தமிழமுதன் |
| 74. | 08.06.2026 | பொள்ளாச்சி | பொள்ளாச்சி | சு.பெ.தமிழமுதன் |
| 75. | 09.06.2026 | ஈரோடு | பவானி | பேரா.ப.காளிமுத்து, சு.பெ.தமிழமுதன் |
| 76. | 05.06.2026 | தாராபுரம் | உடுமலைப்பேட்டை | மு.இளமாறன், பழனி அழகர்சாமி |
| 77. | 06.06.2026 | பழனி | பழனி | மு.இளமாறன், பழனி அழகர்சாமி |
| 78. | 07.06.2026 | கம்பம் | சுருளிப்பட்டி | மு.இளமாறன் |
| 79. | 08.06.2026 | திண்டுக்கல் | சின்னாளப்பட்டி | மு.இளமாறன், இரா.குணசேகரன் |
| 80. | 09.06.2026 | புதுக்கோட்டை | புதுக்கோட்டை | சில்லத்தூர் சிற்றரசு, மு.இளமாறன் |
| 81. | 10.06.2026 | தருமபுரி | தருமபுரி | இரா.பெரியார்செல்வன், ஊமை.ஜெயராமன் |
| 82. | 05.06.2026 | காரைக்குடி | காரைக்குடி | மாங்காடு சுப.மணியரசன், இரா.குணசேகரன் |
| 83. | 06.06.2026 | மயிலாடுதுறை | கொள்ளிடம் | மாங்காடு சுப.மணியரசன், கடவாசல் குணசேகரன் |
| 84. | 07.06.2026 | தஞ்சாவூர் | திருக்காட்டுப்பள்ளி | மாங்காடு சுப.மணியரசன், வீ.கலைவாணி |
| 85. | 08.06.2026 | திருவாரூர் | நன்னிலம் | மாங்காடு சுப.மணியரசன் |
| 86. | 09.06.2026 | நாகப்பட்டினம் | அண்டர்காடு | மாங்காடு சுப.மணியரசன் |
| 87. | 05.06.2026 | காரைக்கால் | காரைக்கால் | பேரா. பூ.சி.இளங்கோவன் |
| 88. | 07.06.2026 | விருத்தாசலம் | பெண்ணாடம் | பேரா. பூ.சி.இளங்கோவன், த.சீ.இளந்திரையன் |
| 89. | 08.06.2026 | கடலூர் | பண்ருட்டி | பேரா. குழந்தைவேலனார், தாமோதரன் |
| 90. | 10.06.2026 | சிதம்பரம் | காட்டுமன்னார்குடி | முனைவர் துரை.சந்திரசேகரன், பேரா. பூ.சி.இளங்கோவன் |
| 91. | 10.06.2026 | சேலம் | சேலம் | இராம.அன்பழகன் |
| 92. | 10.06.2026 | தாராபுரம் | தாராபுரம் | சு.பெ.தமிழமுதன் |
| 93. | 10.06.2026 | திருச்சி | திருவெறும்பூர் | தே.நர்மதா, வி.சி.வில்வம் |
| 94. | 10.06.2026 | அறந்தாங்கி | ஜெகதாபட்டினம் | மு.இளமாறன் |
| 95. | 10.06.2026 | மதுரைபுறநகர் | திருமங்கலம் | பொன்.அருண்குமார், இரா.குணசேகரன் |
| 96. | 10.06.2026 | புதுக்கோட்டை | பொன்னமராவதி | வழக்குரைஞர் பூவை.புலிகேசி |
| 97. | 10.06.2026 | கும்மிடிப்பூண்டி | கும்மிடிப்பூண்டி | முனைவர் அதிரடி க.அன்பழகன், வி.பன்னீர்செல்வம் |
| 98. | 10.06.2026 | ராணிப்பேட்டை | நெமிலி | ச.பிரின்சு என்னாரெசு பெரியார் |
| 99. | 10.06.2026 | விழுப்புரம் | விழுப்புரம் | வழக்குரைஞர் சே.மெ.மதிவதனி |
| 100. | 10.06.2026 | ஈரோடு | குருவரெட்டியூர் | கோவை க.வீரமணி |
| 101. | 10.06.2026 | பெரம்பலூர் | பெரம்பலூர் | தி.என்னாரெசு பிராட்லா |
| 102. | 10.06.2026 | வேலூர் | குடியாத்தம் | வழக்குரைஞர் பா.மணியம்மை |
| 103. | 10.06.2026 | மகாராட்டிரா | மும்பை | Dr.Yeshwant Chawere Mr.Rajaram Patil |

**குறிப்பு:** மாவட்டத் தலைவர், மாவட்டச் செயலாளர் மற்றும் கழகப் பொறுப்பாளர்கள், கழகச் சொற்பொழிவாளர்களைத் தொடர்பு கொண்டு, காவல்துறை அனுமதி பெற்று, பரப்புரைக் கூட்டங்களைச் சிறப்பாக நடத்திட வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ஜூன் 3, 4 ஆகிய தேதிகளில் தி.மு.க.வின் சார்பில் கூட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதால் ஜூன் 5 முதல் 10 வரை இக்கூட்டங்கள் திட்டமிடப்பட்டுள்ளன. தி.மு.க. உள்பட தோழமைக் கட்சியினர், ஒத்த கருத்துடையோர் அனைவரையும் அழைத்து சிறப்பாக நிகழ்ச்சிகளை நடத்த வேண்டும்.

தலைமைக் கழகப் பொறுப்பாளர்கள் தங்கள் பொறுப்பு மாவட்டங்களின் கழகப் பொறுப்பாளர்களைத் தொடர்பு கொண்டு ஒருங்கிணைப்புப் பணிகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

- தலைமை நிலையம், திராவிடர் கழகம்



சென்னை வடகிழக்கு மாவட்டம் சோழவரம் தெற்கு ஒன்றியம் நல்லூர் ஊராட்சிக்குட்பட்ட சிவந்தி ஆதித்தன் நகர் பகுதியில் ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் ரெட்ஹில்ஸ் எம்.எஸ்.மணிகண்டன் ஏற்பாட்டில் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்தநாளை முன்னிட்டு ஏழை எளியோருக்கு உணவு வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் ஒன்றிய கழக செயலாளர் மீ.வே.கர்ணாகரன் தலைமையேற்று அன்னதான நிகழ்வை துவக்கி வைத்தார். மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் திருவெற்றியூர் ஆர்.டி.மதன்குமார் முன்னிலை வகித்தார். இதில் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



சைதை மேற்கு பகுதி 139 அ வட்டம் சார்பில் செம்மொழி நாயகர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்தநாள் விழா வி.எஸ்.எம்.கார்டன் ராகவன் காலனி 4வதுதெரு சந்திப்பில் உள்ள கல்வெட்டு கழக கொடி கம்பத்தில் கொடியேற்றி இனிப்பு வழங்கும் நிகழ்ச்சி வட்டச் செயலாளர் சை.மு. சேகர் தலைமையில் டி.என். சிவமணி, இ.வரதன், மா. ஏழுமலை, பி.எஸ்.பிரகாஷ், சுமதி தீனதயாளன், பூபதி வெங்கடேசன் முன்னிலையில் பகுதி செயலாளர் எம்.கிருஷ்ணமூர்த்தி, தலைமை பொதுக்குழு உறுப்பினர் வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன் ஆகியோர் கழகக் கொடி ஏற்றி பொது மக்களுக்கு உணவு வழங்கினர்.

# ரீல்ஸ் ஆட்சி, ரியாலிட்டியே சாட்சி!

**பொ**ம்மையைக் காட்டி குழந்தையை சிறிது காலம் மயக்கிவிடலாம்…ஆனால், அந்த குழந்தை மீண்டும் தன் தாயை தேடித்தான் ஏங்கும்! அதேபோல,தமிழ்நாட்டு மக்கள் மீண்டும் நம் திராவிட முன்னேற்றக் கழகத்தை நினைத்து ஏங்கி,நம்மிடமே மீண்டும் வருவார்கள்!

நம் கழகத் தலைவர் தொண்டர்களுக்கு வழங்கிய இந்த ஆறுதல் மொழி,வெறும் வார்த்தைகள் அல்ல,

அது நெருப்பில் புடமிடப்பட்ட ஒரு மக்கள் தலைவனின் தீர்க்கதரிசனம்!

தமிழக அரசியல் வரலாற்றில் எத்தனையோ சூழ்ச்சிகளையும், துரோகங்களையும்,வீண்பழி தூற்றுதல்களையும் கண்டு, அவை அனைத்தையும் தவிடுபொடியாக்கி மீண்டெழுந்த பேரியக்கம் தான் நம் திராவிட முன்னேற்றக் கழகம்.

### மாயை தற்காலிகமானது !

நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தல் முடிவுகள் தமிழக அரசியல் பரப்பில் தற்காலிக சலசலப்பை ஏற்படுத்தியிருக்கலாம். ஆனால்,வரலாற்றுப் பாரம்பரியம் கொண்ட,தியாகத் தழும்புகளையே தன் உடலாகத் தாங்கி நிற்கும் திராவிட முன்னேற்றக்கழகத்தை இந்த சறுக்கல்கள் என்றும் வீழ்த்திவிட முடியாது. இது வீழ்ச்சியல்ல; எழுச்சிக்கான இடைவேளை! முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் அடியொற்றி,கழகத்தைக் காக்கும் இமயமாய் விளங்கும் நம் அன்பு அண்ணன் அருமைத் தளபதியார் அவர்களின் பாதையில் நாம் வீறுகொண்டெழுவோம்.

***'சிலரை சில காலம் ஏமாற்றலாம்; பலரை பல காலம் ஏமாற்றலாம்; ஆனால் எல்லோரையும் எல்லா காலத்திலும் ஏமாற்ற முடியாது!'***

முத்தமிழறிஞர் கலைஞரின் வைர வரிகள் இவை.

கடந்த சட்டமன்றத் தேர்தலில், சமூக வலைத்தளமான Instagram பக்கங்களில் நம் கழகத்தைப் பற்றி திட்டமிட்டு அவதூறுகளையும், பொய்ப் பரப்புரைகளையும், அப்பட்டமான வதந்திகளையும் பரப்பியது நடிகர் கட்சி.மொபைல் திரைக்குள் மூழ்கிக் கிடக்கும் விபரம் அறியா குழந்தைகள் மற்றும் சிறார்கள் மூலமாக, அவர்களின் பெற்றோருக்கு உணர்ச்சிப்பூர்வமான அழுத்தங்களை வழங்கி, குறுக்கு வழியில் வாக்கு செலுத்த வைத்து,இன்று ஆட்சிக் கட்டிலில் அமர்ந்திருக்கிறது அந்த மோசடி கும்பல்.

ஆனால், பொய் வேடம் கலைந்து உண்மை வெளிப்பட ஒரு மாதம் கூட முழுமையாகத் தேவைப்படவில்லை. இன்று தமிழகம் எங்கே சென்று கொண்டிருக்கிறது? மாநிலம் முழுக்கத் தொடர் மின்வெட்டு,இளைஞர்களின் எதிர்காலத்தைச் சீரழிக்கும் மிதமிஞ்சிய போதைப்பொருள் புழக்கம்,கோவை சூலூர் பகுதியில் பிஞ்சு சிறுமி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்ட நெஞ்சை உலுக்கும் படுபாதக சம்பவம், அதிகரிக்கும் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் என தமிழகத்தின் சட்டம் ஒழுங்கு முற்றிலும் சீர்கெட்டுப் போய் சந்தி சிரிக்கிறது.

இவற்றைக் கண்டு மக்கள் கொதித்துப் போயிருக்கிறார்கள் என்பது கண்கூடு.மக்கள் பிரச்சினை களைப் பற்றி வாய் திறக்காமல் கள்ள மௌனியாக இருக்கும் பொம்மை முதலமைச்சரை கண்டு தமிழகமே தாங்கள் ஏமாற்றப்பட்டதை உணர்ந்து தங்களை தாங்களே நொந்து கொள்கிறார்கள். இதனைத்தான் நம் சட்டமன்ற எதிர்கட்சித் தலைவர், கழகத்தின் இளம் தலைவர் **'ரீல்ஸ் ஆட்சி செய்யாமல், 'ரியல்' ஆட்சி செய்யப் பழகுங்கள்!'** எனச் சாட்டையடியாக கண்டித்துள்ளார். விளம்பர வெளிச்சத்தில் சொகுசு நாற்காலியில் அமர்ந்திருக்கும் இந்த அரசை 'Sofa Model' ஆட்சி என்று அவர் மிகத் துல்லியமாக விமர்சித்திருப்பது மக்கள் மத்தியிலே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.மக்கள் விரோத போக்குகளுக்கு துணை போக விரும்பாமல், நம்பிக்கை வாக்கெடுப்பைப் புறக்கணித்து அவர் தலைமையில் கழக சட்டமன்ற உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்த வீரம், நம் கழகத்தினர் என்றும் அண்ணா மற்றும் முத்தமிழறிஞர் கலைஞரின் வாரிசு தான் என்பதை நிரூபித்துக் காட்டியது.

### ரீல்ஸ் ஆட்சியும்… ரியல் காட்சியும்!

வெறும் 108 தொகுதிகளை மட்டுமே தட்டுத்தடுமாறி வென்று,ஆட்சி அமைக்க தேவையான போதிய பலம் கூட இல்லாமல், குதிரை பேரத்திலும், சுயநலக்கூட்டணிக் கட்சிகளின் தயவிலும் இன்று ஒரு 'சோபா மாடல்' அரங்கேறிக் கொண்டிருக்கிறது.

திமுக கூட்டணியில் இருந்து கொண்டு, மக்கள் தந்த அங்கீகாரத்தை அனுபவித்துவிட்டு,தேர்தல் முடிவுகள் வந்த அடுத்த கணமே தங்களின் சுயரூபத்தைக் காட்டி, ஆளும்கட்சியுடன் ஒட்டிக்கொண்ட காங்கிரஸ் கட்சியின் மாபெரும் துரோகத்தைக் கண்டு தமிழ்நாடே முகம் சுளித்து நிற்கிறது.'குடியரசு ஆட்சி வந்துவிடக் கூடாது, அதற்காகத்தான் ஆதரிக்கிறோம்' என்று நாடகமாடிவிட்டு, இன்று பதவிகளுக்காக ஆசைப்பட்டு நடிகர் கட்சியின் அமைச்சரவையில் போய் மண்டியிட்டு அமர்ந்திருக்கும் இந்த கட்சிகளின் முதுகில் குத்தும் செயல்,அடிமட்டக் கழகத் தொண்டர்களின் நெஞ்சில் எரிமலையைக் கூட்டியுள்ளது.

### 6 மாத கால அவகாசமும்… விழிபிதுங்கும் அவலங்களும்!

புதிதாகப் பொறுப்பேற்ற அரசுக்கு 6 மாத காலம் அவகாசம் வழங்குவோம்,ஆட்சி அமைக்க எந்த இடையூறும் செய்ய மாட்டோம்' என்று பேரறிஞர் அண்ணாவின் பெருந்தன்மையோடும், முத்தமிழறிஞர் கலைஞரின் அரசியல் நாகரிகத்தோடும் நம் தலைவர் தளபதியார் அறிவித்திருந்தார். ஆனால்,இந்த ஒரு சில வாரங்களிலேயே தமிழகத்தின் நிலைமை என்ன லட்சணத்தில் இருக்கிறது?

நாள்தோறும் அரங்கேறும் பாலியல் வன்கொடுமைகள்,பட்டப்பகலில் நடக்கும் கொலைகள், கட்டுப்பாடின்றிப் பெருகிவரும் போதைப்பொருள் புழக்கம், மற்றும் மக்கள் வாழ்வை இருளில் தள்ளும் தொடரும் மின்வெட்டு எனத் தமிழகம் தத்தளித்துக் கொண்டிருக்கிறது. இதற்கெல்லாம் சட்டமன்றத்தில் நேடியாகப் பதிலளிக்கத் துப்பில்லாமல், சவகாசமாக வீட்டிற்குச் சென்று சமூக வலைதளங்களில் (X/Twitter) பதில் சொல்லும் ஒரு **'விசித்திர முதல்வர்'** நமக்குக் கிடைத்துள்ளார். அதுமட்டுமா?

பதவியேற்பு விழாவில் தமிழ்த்தாய் வாழ்த்து ஓரங்கட்டப்படுகிறது; ஆளுநர் மாளிகை நிகழ்ச்சிகளில் தமிழினத்தின் அடையாளம் திருவள்ளுவருக்கு காவிச்சாயம் பூசப்படுகிறது. இதையெல்லாம் தட்டிக்கேட்கத் திராணியற்று,கொள்கையற்ற ஒரு பொம்மை அரசாங்கம் இங்கே நடந்துகொண்டிருக்கிறது.

6 மாதம் நேரம் கொடுக்கிறேன் என்று கூறி விட்டு 6 நாளில் கேள்வி கேட்கிறார் என்று சொல்லும் நடிகரே ! தமிழ் நாட்டிற்கு ஊறு விளைவிக்கும் செயல்களை அரை நொடியும் பொறுத்து கொள்ள மாட்டார் எங்கள் கழகத்தலைவர்,அவரின் வார்ப்பு எதிர்க்கட்சி தலைவர் எங்கள் இளம் தலைவர் கேள்விக்கு பதில் அளிக்க திராணியின்றி திருச்சியில் நீங்கள் புலம்பியதை பார்க்கையில் உங்களின் பதைபதைப்பை தமிழ் நாட்டு மக்களும் நன்றாக தெரிந்து கொண்டனர்.ரீல்ஸ் ஆட்சியின் ரியாலிட்டியை தமிழ்நாட்டு மக்கள் உணரத்தொடங்கி விட்டனர்.

ரீல்ஸ் மோகம் கொண்ட அமைச்சர்கள்,ஆய்வு என்ற பெயரில் அரசு அலுவலகங்களில் அத்து மீறும் ஆளும் கட்சியினர்,அதற்கு ஒத்து ஊதும் ஆளும் கட்சி எம்.எல்.ஏக்கள் நாட்டின் சட்டம் ஒழுங்கு பிரச்சினைகள்,அறிவிக்கப்படாத தொடர் மின் வெட்டு இதை கண்டு வாக்களித்த மக்களுக்கே ஒரு இனம் புரியாத பயம் மனதில் எழுந்து விட்டது.இந்த இரவல் ஆட்சி நீண்ட நாட்களுக்கு நீளக்கூடாது என்று மக்கள் புலம்புவது நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

### மக்கள் நலனுக்காக உழைத்த 'திராவிட மாடல்' அரசு!

நமது கழகத்தலைவர், தமிழகத்தின் அசைக்க முடியாத உழைப்பின் அடையாளம், தளபதியார் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சி, கடந்த ஐந்து ஆண்டுகளில் செய்யாத சாதனைகளா? இந்தியாவே வியந்து பார்த்த திட்டங்களை எளிய மக்களின் இல்லங்கள் தேடிச் சேர்த்தவர் நம் தளபதியார்.

**கலைஞர் மகளிர் உரிமைத் தொகை:** கோடிக்கணக்கான இல்லத்தரசிகளின் பொருளாதாரச் சுதந்திரத்தை உறுதி செய்த வரலாற்றுச் சிறப்புமிக்கத் திட்டம்.

**மகளிர் விடியல் பயணம்:** பெண்கள் சுதந்திரமாக, கட்டணமில்லாமல் பேருந்துகளில் பயணித்துத் தங்கள் வாழ்வாதாரத்தை உயர்த்திய உன்னதத் திட்டம்.

**நான் முதல்வன்,தமிழ்ப்புதல்வன்,புதுமைப்பெண் திட்டம்:** அரசுப் பள்ளிகளில் படித்து உயர்கல்விக்குச் செல்லும் மாணவ,மாணவியரின் கனவுகளுக்குச் சிறகு முளைக்கச் செய்த கல்விப் புரட்சி.

**மக்களைத் தேடி மருத்துவம்:** மருத்துவமனைக்கு வர முடியாத ஏழைகளின் வாசற்படிக்கே சென்று உயிர் காத்த உன்னதத் திட்டம்.

இப்படித் தமிழகத்தின் ஒவ்வொரு வீட்டிலும் ஏதோ ஒரு வகையில் திராவிட மாடல் ஆட்சியின் பயனை மக்கள் அனுபவித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். இத்தனை மக்கள் நலத்திட்டங்களை நெஞ்சாரச் செயல்படுத்திய பிறகும், ஒரு தந்திரமான சமூக வலைதளப் பிரச்சாரம், இன்ஸ்டாகிராம் அவதூறுகள் மற்றும் வதந்திகள் மூலமாக, பிஞ்சுக் குழந்தைகள் வழியாகப் பெற்றோர்களுக்கு மன அழுத்தத்தை ஏற்படுத்தி, வாக்குகளை ஏமாற்றிப் பறித்துள்ளது ஒரு நடிகர் கட்சி.

ஆனால் உண்மையில் நடிகர் கட்சி ஆட்சி அமைக்க வேண்டும் என்று வாக்களித்தவர்களை விட, கொள்கையற்ற அந்த ஆட்சி வரக்கூடாது என்று அஞ்சிய, திமுகவிற்கு வாக்களித்த ஜனநாயகவாதிகளின் எண்ணிக்கையே அதிகம்.

தற்காலிக வதந்திகளால் திசைதிருப்பப்பட்ட மக்கள், இப்போது இந்த ரீல்ஸ் ஆட்சியின் சட்டம்ஒழுங்கு சீர்கேட்டைக் கண்டு விழித்துக் கொண்டுவிட்டார்கள்.

சமீபத்தில் நடந்த GenZ DMK நிகழ்ச்சியே அதற்குச் சான்று! தமிழகத்தின் இளைய தலைமுறை, வெறும் ரீல்ஸ்களை நம்பி ஏமாறத் தயாராக இல்லை. அவர்கள் பகுத்தறிவுப் பகலவன் பெரியாரின் கொள்கைகளையும், அண்ணாவின் தம்பிகளாக, கலைஞரின் உடன்பிறப்புகளாகத் தளபதியாரின் பின்னால் அணிவகுத்து நிற்க தயாராகிவிட்டார்கள் என்பதை அந்த நிகழ்ச்சி பறைசாற்றியுள்ளது.

நமது GenZ DMK இளைஞர் படை! இணையத்திலும் சரி, களத்திலும் சரி… நவீன காலத்து அரசியல் உத்திகளைக் கையாண்டு, கழகத்தின் கொள்கைகளை இளைய தலைமுறையினரிடம் கொண்டு சேர்த்து,இப்படை, கழகத்திற்குப் புதிய ரத்தத்தைப் பாய்ச்சி, வெற்றிக்கான பாதையைச் செப்பனிட்டு வருகிறது.

முனைவர். பி.பழனியப்பன்
செயலாளர்
தருமபுரி மேற்கு மாவட்ட தி.மு.க. –
மேனாள் அமைச்சர்



### 'உடன்பிறப்பின் குரல்' தளபதியாரின் ஜனநாயகப் பண்பு!

தேர்தல் தோல்விக்குத் தார்மீகப் பொறுப்பேற்று, தன்னைத் தானே சுயபரிசோதனை செய்து கொள்ளும் உன்னத ஜனநாயகப் பண்பை நம் தளபதியார் தவிர வேறு எந்தத் தலைவரிடமும் காண முடியாது. தேர்தல் முடிந்த கையோடு, கழகத்தை சீர்படுத்தவும், தொண்டர்களின் உண்மையான மனவோட்டத்தை அறியவும் 'உடன்பிறப்பின் குரல்' என்ற இணையதள வாயிலாக தொண்டர்கள் மற்றும் பொதுமக்களிடம் நேரடியாக கருத்துக்களைக் கேட்டுள்ளார்.

அதுமட்டுமன்றி, தோல்விக்கான உண்மையான காரணங்களை ஆராய மண்டல வாரியாக ஆய்வுக் குழுக்களை அமைத்து, கள நிலவர அறிக்கையை கேட்டுள்ளார். தவறு எங்கே நடந்திருந்தாலும் அதைச் சரிசெய்து, கழகத்தை அடுத்த கட்டத்திற்குத் துணிவோடு எடுத்துச் செல்லும் இந்தக் கைய ஆளுமைத்திறன் தான் நம் தளபதியாரை மக்கள் தலைவனாக உயர்த்திக் காட்டுகிறது.

### அருமை உடன்பிறப்புகளே!

மயக்கங்கள் தற்காலிகமானவை, தாயின் பாசம் போன்ற திராவிடக் கொள்கைகளின் தேவை நிரந்தரமானது. மயங்கிப் போன தமிழக மக்கள், இந்த ஒரு மாத கால அவல ஆட்சியிலேயே உண்மையை உணரத் தொடங்கிவிட்டார்கள். மீண்டும் நம் கழகத்தின் பொற்கால ஆட்சியை நோக்கி மக்கள் திரும்பும் நாள் வெகுதொலைவில் இல்லை.

மக்களைப் பற்றி மட்டுமே சிந்திக்கும், தொண்டர்களைத் தன் உடன்பிறப்பாகக் கருதும் நம் அருமைத் தளபதியார் அவர்களின் வழியில் களப்பணி ஆற்றுவோம்!

தளபதியாரின் சிங்க நடை தொடரும்! மீண்டும் வரும் திமுக!

**முத்தமிழறிஞர் டாக்டர்.கலைஞரின் பிறந்தநாளையொட்டி நாம் எடுத்துக் கொள்ள வேண்டிய ஒரே சபதம் — இழந்ததை மீட்டெடுப்போம். துரோகிகளை வீழ்த்துவோம் என்பதுதான்!**

பகுத்தறிவுத் தந்தை பெரியார் நமக்குக் கற்றுத் தந்த மானமும் அறிவும்.

பேரறிஞர் அண்ணா தந்த கடமை, கண்ணியம், கட்டுப்பாடு.

முத்தமிழறிஞர் கலைஞர் ஊட்டிய போராட்டக் குணம்.

நம் தலைவர் தளபதியாரின் அயராத உழைப்பு.

மற்றும் இளம் தலைவரின் செயல்திறன் என அனைத்தும் ஒன்று சேரும்போது.

எந்த ஒரு மாயை அரசியலும் தவிடுபொடியாவது நிச்சயம்.

**திமுக மீண்டும் வரும்;**
**மீண்டும் வரும்**
**மக்கள் ஆதரவோடு**
**கம்பீரமாக ஆட்சிக்கு வரும்!**

என்றும் கழகத்தலைவர் வழியில்